கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

முன்னிலை:- திருமதி வி.கீதா, பி.ஏ.,எம்.எல்.,
(கூடுதல் பொறுப்பு)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2021-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் நாள் செவ்வாய்க்கிழமை

*இ.ம.எண். 426/2021 இன் அசல் வழக்கு எண்: 332/2008*

பொன்னம்பலசாமி மடம்
என்கிற KCT மடாலயம்
அதன் முகவர் மடாதிபதி அவர்கள் ....மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

1. ஏ.ராமதாஸ் (இறந்துவிட்டார்)
2. ஆர்.கிரி
3. ஆர்.புனிதா … எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இடைக்கால மனு என் முன்னர் கடந்த 13.12.2021ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.அ.சம்மந்தம், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.ராஜேந்திரன், அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பையும் கேட்டறிந்து வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்...

உத்தரவு

பி.வா.சா.1ன் சாட்சியத்தை நீதிமன்ற ஆணையர் முன்னிலையில் பதிவு செய்து மனுதாரரின் இருப்பிடத்திற்கு சென்று பி.வா.சா.1ன் சாட்சியத்தை பெறும் வகையில் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய வேண்டி மனுதாரரால், உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 26 விதி 2 ன்கீழ் தாக்கல் செய்த மனு.

2) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் :

இம்மனுவின் மனுதாரர் மடத்தின் மடாதிபதி என்றும், அசல் வழக்கில் பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரர்கள் வழக்கில் வாதிகள் என்றும், வழக்கு சொத்துக்களை பொறுத்து 18.10.1990 மற்றும் 30.6.1992 தேதியிட்ட கிரய ஒப்பந்தத்தின்படி ஏற்றதை ஆற்றுக கோரி 1ம் எதிர்மனுதாரர் தங்கள் பெயரில் அசல் வழக்கு தாக்கல் செய்ததாகவும், அந்த ஒப்பந்தங்களை மறுத்து தாங்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1ம் எதிர்மனுதாரர் இறந்து 2, 3 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், அசல் வழக்கு விசாரணையில், வாதி தரப்பு சாட்சியம் முடிவுற்று பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக

அசல் வழக்கு நிலுவையில் உள்ளதாகவும், இந்த மடத்தின் கிளை சிதம்பரத்தில் உள்ளதாகவும், தற்போதைய மடாதிபதியான மனுதாரர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட வேண்டியவர் என்றும், தன்னுடைய சாட்சியத்திற்கு பின்னரே மற்ற சாட்சியங்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்றும், தனக்கு இப்போது 81 வயதாகிறது என்றும், தனக்கு இதய பைபாஸ் சர்ஜரி செய்துள்ளதாகவும், தான் பயணிக்கக்கூடாது என மருத்துவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், கொரானா தொற்றுகாலத்திற்கு பிறகு தான் பயணம் செய்யக்கூடாது என அறிவுறுத்தப்பட்டதாகவும், தான் சிதம்பரத்திலிருந்து 220 கி.மீ அப்பால் உள்ள காரைக்குடிககு அருகில் கோவிலூா் மடத்தில் வசிப்பதாகவும், தான் இரத்த கொதிப்பினாலும் அவதிப்படுவதாகவும், தான் கொரானாவால் பாதிக்கப்பட்ட பின்னா் ஆரோக்கியம் இல்லாமல் இருப்பதாகவும், எனவே பி.வா.சா.1ன் சாட்சியத்தை நீதிமன்ற ஆணையா் முன்னிலையில் பதிவு செய்து மனுதாரரின் இருப்பிடத்திற்கு சென்று பி.வா.சா.1ன் சாட்சியத்தை பெறும் வகையில் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3) எதிர்மனுதாரரால் தாக்கல் செய்த எதிருரையின் சுரக்கம்:</u>

மனுதாரா் கொடுத்துள்ள இம்மனு சரியல்ல என்றும், மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், அனைத்து பள்ளிகளும் கல்லூரிகளும் திறந்து விட்டன என்றும், தமிழ்நாட்டில் கொரானா அச்சுறுத்தல் காலம் மாறிவிட்டது என்றும், காரைக்குடிக்கு சென்று சாட்சியத்தை பதிவு செய்ய நீதிமன்ற ஆணையா் நியமனம் அவசியமற்றது என்றும், மனுதாரா் பைபாஸ் சா்ஜரி செய்து கொண்டதற்கோ, ரத்த கொதிப்பு உள்ளது என்பதற்கோ ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மனுதாரா் திறந்த நீதிமன்றத்தில் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டால்தான் மனுதாரரின் சாட்சியத்தன்மை மற்றும் செயல்படுத்தன்மை குறித்து நீதிமன்றம் கணிக்க இயலும் என்றும் எனவே எதிர்மனுதாரா் இந்த மனுவினை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

4. இருதரப்பிலும் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் அளிக்கப்படவில்லை.

5<u>) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.</u>

6. இருதரப்பு வாதங்களையும் வழக்கு கோப்புகளையும் பரிசீலனை செய்கையில், அசல் வழக்கானது, ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவினை பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு 81 வயதாகிறது என்றும்,

மனுதாரருக்கு பைபாஸ் சர்ஜரி செய்துள்ளதாகவும், அவர் பயணிக்கக்கூடாது என மருத்துவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், கொரானா தொற்றுகாலத்திற்கு பிறகு தான் பயணம் செய்யக்கூடாது என அறிவுறுத்தப்பட்டதாக மனுதாரரின் பி.வா.சா.1ன் சாட்சியத்தை பதிவு செய்ய வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமிக்க இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தனது எதிருரையில் *மனுதாரர் பைபாஸ் சர்ஜரி செய்து கொண்டதற்கோ, ரத்த கொதிப்பு உள்ளது என்பதற்கோ ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மனுதாரர் திறந்த நீதிமன்றத்தில் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டால்தான் மனுதாரரின் சாட்சியத்தன்மை மற்றும் செயல்படுத்தன்மை (demeanor) குறித்து நீதிமன்றம் கணிக்க இயலும் என்றும்* இம்மனுவிற்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளார். இதுகுறித்து மனு நிலுவையில் இருக்கும்போது மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு பைபாஸ் சர்ஜரி செய்ததற்கு மருத்துவ சான்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு 81 வயதாகிறது என்பது குறித்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித மறுப்பும் தெரிவிக்காத நிலையில், மனுதாரருக்க 81 வயதாவதால், வயதுமூப்பு காரணமாக மனுதாரர் நீதிமன்றம் ஆஜராகி சாட்சியம் அளிப்பது மனுதாரருக்கு கடினமாக இருக்கும் என்ற மனுதாரர் தரப்பு வாதம் ஏற்கும்படியாகவே உள்ளது. பி.வா.சா.1ன் சாட்சியத்தை நீதிமன்ற ஆணையர் முன்னிலையில் பதிவு செய்து ஆணையர் அறிக்கையை பெற தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவினை அனுமதிப்பதே சரியானதாக இருக்கும் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியில் இம்மனுவானது கீழ்கண்டவாறு அனுமதிக்கப்படுகிறது.

திரு.ஏ.நடனம் வழக்குரைஞர் அவர்கள் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்தும், அவர் பி.வா.சா.1ன் சாட்சியத்தை பதிவு செய்து ஆணையர் அறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

நீதிமன்ற ஆணையருக்கான ஊதியமாக ரூ.5000- நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரர் நீதிமன்ற ஆணையர் ஊதியத்தை 5 தினங்களுக்குள் நேரடியாக செலுத்தி, ரசீது தாக்கல் செய்யும்பட்சத்தில் நீதிமன்ற ஆணையருக்கான வாரண்ட் வழங்கப்படும். தவறும் பட்சத்தில் இம்மனுவானது தன்னிச்சையாக தள்ளுபடி செய்யப்படும். அழைக்க 7.1.2022.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 21.12.2021ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-V.Geetha)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.(FAC)